[1992 பிப்ரவரி 6

77—

அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி.

*4826 திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியம் மூலம் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தரும் திட்டம் மாவட்டத்தலைநகரிலும் கோட்டாட்சியர் தலைநகரிலும் மட்டும் இருப்பதை, வட்டாட்சியர் தலைமையகம் வரை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானிடப் பிறவிக்குத் தேவையான மூன்று முக்கிய வசதிகளில், இருக்க வீடு என்பதும் ஒன்று என்பதை உணர்ந்து நம்முடைய இதய தெய்வம் அவர்கள் வீட்டு வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வீட்டு வசதி செய்து கொடுக்கும் இந்த பொற்காலத்தில் வட்ட ஆட்சியாளர்களின் தலைமையகம் இருக்கும் நகரில் வீட்டு வசதி செய்து தர இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி, அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடு கட்டித் தர முடியுமா என்பது. வட்ட ஆட்சியாளர்களுடைய தலைமையகத்தைப் பொறுத்தவரையில், போதிய நிலமும், குடியிருப்புகளுக்கான தேவையும் மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரை இருந்தாலும் விசேஷ அங்கீகாரம் அளித்து வட்ட ஆட்சியாளர் தலைமையிடத்திலேயும் இத்திட்டத்தை செயல்படுத்த இயலும் என அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 78, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஆர். தங்கராஜ், திரு. செ. து. வரதராஜன், திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் :